**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**
**அசல் வழக்கு எண். 163/2024**

**PW: 1 –குருவம்மாள், க/பெ.முத்துச்சாமி** **நாள் : 23.06.2025**

**2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞருக்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரத்தினை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தகப்பானார் கிரையம் வாங்கியதாக சொல்லக்கூடிய சொத்துகளில் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல கிரைய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் செய்யவில்லை என்றால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதி தங்கராஜ் எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். 2ம் பிரதிவாதியின் மனைவி, எனது கணவர் மற்றும் 4ம் பிரதிவாதியும் உடன் பிறந்தவர்கள் என்றால் ஆமாம். எனது மாமனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை 2ம் பிரதிவாதியின் மனைவிக்கும், 4ம் பிரதிவாதிக்கும் உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது பிள்ளைகளுடன் நான் சுமூகமான உறவில் தான் இருக்கிறேன் என்றால் ஆமாம்.

எனது மாமனார் உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்த சொத்துகளைப் பொறுத்து எனது மகளும் எனது கணவரின் அண்ணன் பெருமாள் மகளும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி வழக்கு இன்று வரை திருவில்லிபுத்தூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் தற்போது விலகி விட்டதாகவும் கூறுகிறார். நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1973 வருடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி லட்சுமிக்கும், எனக்கு திருமணம் முடிந்த 3 வருடம் கழித்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் ஆன நாள் முதலே நான் எனது

கணவர் வீட்டில் 3 வது பிரதிவாதி மதுரை மாவட்டம் முத்துலிங்காபுரத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். பெண்களுக்கு சொத்தில் உரிமை என்னும் சட்டம் 1990 ல் தான் நடைமுறைக்கு வந்தது என்றும் அதற்கு முன்பே எனது தகப்பானாருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை பிரித்துக் கொண்டதால் தற்போது பாகப் பிரிவு கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. சொத்து பாகம் பிரிக்கப்படாமல் இருந்து வருகிறது. திருமணமாகி நான் எனது கணவர் வீட்டில் வசித்து வருவதால் எந்தக் காலத்தில் சொத்துகளை கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கூட்டு அனுபவத்தை நிரூபிக்கும் வகையில் வருவாய் துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் இல்லை.

எனது தகப்பானருடைய சொத்தின் விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். புல எண் குறித்த விபரம் எனக்கு நினைவு இல்லை ஆனால் சொத்து அமைந்துள்ள இடம் பற்றியும், அதன் நான்கு மால்கள் குறித்த விபரங்கள் எனக்குத் தெரியும். 2 வது சொத்து என்ன சொத்து என்ற விபரம் தெரியுமா என்றால் மோட்டார் அறையுடன் சேர்ந்த தோப்பு ஆகும். அதன் விஸ்தீரணம் 75 செண்ட் ஆகும். தபசில் சொத்துகள் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு வரை கூட்டு அனுபவத்தில் தான் இருந்து வந்தது. பிராது 2,3 தபசில் சொத்துகளை கடந்த 28.03.2003 ம் தேதி 2 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 4 வது பிரதிவாதி ஆகியோர்கள் சுப்பையா என்பவருக்கும் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்று சொன்னால் கிரையம் செய்தது பற்றி எனக்குத் தெரியாது. கிரைய தேதி முதல் நாளது தேதி வரை மேற்படி சுப்பையா என்பவர் தான் சொத்துகளை தன் பெயருக்கு வருவாய்துறை ஆவணங்களைப் பெற்று தற்போது அவரது வாரிசுகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2003 கிரைய காலத்திலேயே 2,3 தபசு சொத்துகளின் கிரையத் தொகை ரூ.1,30,780/- என்றும் தவறாக பிராதில் 2 தபசு சொத்துகளின் மதிப்பு ரூ.33.60/-என்றும் 3 வது தபசில் சொத்துகளின் மதிப்பு ரூ.30,000/- குறைவாக மதிப்பீடு செய்து காட்டியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் 1 வது தபசில் சொத்து எந்த சொத்து என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1 வது தபசில் உள்ள சொத்துகள் கடந்த 06.01.2005 ம் தேதி திருப்பதி என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்தையும் குறைத்து மதிப்பீடு செய்து தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 1 வது தபசில் சொத்து திருப்பதி கிரையம்

பெற்ற நாள் முதல் தற்போது வரை வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றி அனுபவர் செய்து வருகிறார் என்றால் சரிதான். 4 வது தபசில் சொத்து எந்த சொத்து என்றால் சேதுநாராயணபுரம் பாடியப்பா கண்மாய் பகுதியில் உள்ளது. 4 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியை எனது பெற்றோர்களின் ஜீவானம்சத்திற்காகவும் மற்றொரு பகுதியை 2 வது பிரதிவாதி மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவருக்கும் பாகம் பிரிக்கப்பட்டது என்றும் எனது பெற்றோர்களின் அனுபவத்தில் இருந்த ஒரு பகுதி அவர்களது காலத்திற்கு பின்பு 2 வது பிரதிவாதி மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவருக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4 வது தபசில் உள்ள சொத்துகளின் ஒரு பகுதியை எனது தகப்பானர் 08.09.1982 ம் தேதி முத்தையா நாயக்கர் என்பவருக்கு ரூ.8,000/- கடனாகப் பெற்றுக் கொண்டு புரோநோட்டு எழுதிக் கொடுத்தார் என்றும் மேற்படி கடனை 2 வது பிரதிவாதி மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவர் ஆகியோர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கடனே வாங்கவில்லை. மேற்படி கடனை 2 வது பிரதிவாதிகள் மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவரே தீர்த்தார்கள் என்றால் சரியல்ல. 5 வது தபசில் சொத்து எந்த சொத்து என்று எனக்குத் தெரியும். மேற்படி சொத்தை எனது பெற்றோர்கள் காலத்திற்கு பிறகு 2 வது பிரதிவாதி மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவருக்கு சேர வேண்டும் என்று 1982 ம் வருடத்திலேயே பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5-8 வரையிலான தபசில் சொத்துகளை எனது பெற்றோர்கள் காலத்திற்கு பிறகு 2 வது பிரதிவாதி மற்றும் 4 வது பிரதிவாதியின் கணவருக்கு சேர வேண்டும் என்று 1982 ம் வருடத்திலேயே பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 6 வது தபசில் சொத்தில் 2 வது பிரதிவாதி வீட்டு வசதி வாரிய சங்கத்தில் கடன் பெற்று வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 8 வது தபசில் சொத்தை 2 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 6 மற்றும் 8 வது தபசில் சொத்களுக்கு 2 ம் பிரதிவாதியின் பெயரிலேயே வரி விதிப்பு ஏற்பட்டு வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சொத்து பொதுச் சொத்து. பிராது 7 வது தபசில் சொத்து 4 வது பிரதிவாதிக்கு காலி மனையாக ஒதுக்கப்பட்டு அதில் வீடு கட்டி 4 வது பிரதிவாதியின் வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சொத்து பொதுச் சொத்து. நான் இந்த வழக்கை கூட்டாக அனுபவம் செய்யமால் கூட்டு அனுபவதாரர் என்று பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ஆதலால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/-எம்.இராமநாதன்/-
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு